# தொடக்கப் பள்ளி தொடங்குகிறீர்களா?

பள்ளிப்படிப்பைத் தொடங்குவது குழந்தைகள், பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்குக் குதுகலமான தருணம்.

தொடக்கப் பள்ளியின் முதலாம் ஆண்டு, அடிப்படை நிலை (Foundation) அல்லது ஆயத்தப்படுத்தல் நிலை (Prep) என அழைக்கப்படுகிறது.

விக்டோரிய அரசுத் தொடக்கப் பள்ளியில் சேர்வதற்கு, உங்கள் குழந்தை பள்ளியைத் தொடங்குவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு பின்வரும் படிகளைப் பின்பற்றவும்.

## விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன்னர்

எங்கள் இணையதளத்தில் எப்போது, எப்படி பதிவு செய்வது என்பது பற்றி வாசிக்கவும்.

உங்கள் குழந்தை பள்ளியைத் தொடங்குவதற்கான சரியான வயதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

உங்கள் உள்ளூர்ப் பள்ளி மற்றும் பிற அருகில் உள்ள அரசுப் பள்ளிகளைக் கண்டுபிடியுங்கள் **findmyschool.vic.gov.au**

பள்ளியைச் சுற்றிப்பார்ப்பதற்கு முன்பதிவு செய்வதற்கு, வருகை தருவதற்கு அல்லது கூடுதல் தகவல்களுக்கு ஆரம்பப் பள்ளிகளைத் தொடர்புகொள்ளுங்கள்

## அடிப்படை நிலையில் (Foundation) சேர்வதற்காக விண்ணப்பித்தல்

தொடக்கப் பள்ளியிலிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பெறுங்கள்

தேவையான ஆவணங்களைச் சேகரியுங்கள்

எல்லாவற்றையும் தொடக்கப் பள்ளிக்கு உரிய தேதிக்குள் சமர்ப்பியுங்கள் (ஜூலை மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை)

பள்ளி உங்களைத் தொடர்பு கொள்ளும் வரை காத்திருங்கள் (ஆகஸ்ட் முதல் 2 வாரங்களின்போது)

**நீங்கள் மேலும் அறியலாம் மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை அணுகலாம்:**

அடிப்படை நிலையில் (Prep) பதிவுசெய்தல் | விக்டோரிய அரசு

THE EDUCATION STATE

VICTORIA State Government | Department of Education

23-082